**பிங்கிரிய பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 25 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 24ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பிங்கிரிய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 09 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மெய்மெய்யாய்வுச் சபை ஒன்று நியமிக்கப்பட்டு அக்காணிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து 2020 இறுதிக் கணக்குகளில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். |
| (ஆ) | சபைக்கு நன்கொடையாகக் கிடைத்திருந்த 958 நீர்க்குழாய்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | குறிப்பிடப்பட்டுள்ள உபகரணங்கள் தொடர்பாக கண்டறிந்து 2020 இறுதிக் கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இருந்த ரூபா 2,541,472 எதிர்பாராத வரவு மீதிக்கான காரணத்தைக் கண்டறிவது மற்றும் தவறை சரிசெய்வது இடம்பெற்றிருக்கவில்லை. | தொங்கல் கணக்கு மீதிக்கான காரணங்களை இனங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொங்கல் கணக்கு செலவு மீதிக்கான காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் தவறுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். |
| (ஈ) | கேள்வி வாடகை நிலுவை ரூபா 768,642 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன் | இடம்பெற்றுள்ள தவறை ஏற்றுக்கொள்வதுடன், 2020 இறுதிக்கணக்கில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். |
| (உ) | மோட்டார் வாகனம் மற்றும் வண்டில்களின் பெறுமதி 5,076,000 கூடுதலாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரி செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன் | இடம்பெற்றுள்ள தவறை ஏற்றுக்கொள்வதுடன், 2020 இறுதிக்கணக்கில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். |
| (ஊ) | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்துக்கு நிலையியல் கட்டளைகளின் பிரகாரம் செலுத்தப்பட்ட ரூபா 145,309 நிதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரி செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன் | 2019 திசெம்பரில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதிய கடன் தவணையான ரூபா 45,309 கடன் கொடுத்தோர் தொகையில சேர்த்து கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் 04 கணக்கு விடயங்களுடன் தொடர்பான ரூபா 63,286,672 தொகையில் இணக்கமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய துணைஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்து இற்றைப்பத்தல் மேற்கொள்ளப்பட்டு இவ்வேறுபாடுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | ரூபா 312,188,596 பெறுமதியான 11 கணக்கு விடயங்களுடன் தொடர்பான விரிவான ஆவணங்கள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் திருப்திகரமான முறையில் சரிபார்க்க முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள் ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் விதமாக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்பட்டுள்ள குறைபாடுகள் தொடர்பாக கவலையடைவதுடன் எதிர்வரும் கணக்காய்வு செயற்பாடுகளுக்குத் தேவையான ஆவணங்கள மற்றும் தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (ஒ) | மீளாய்வாண்டில் காணிகள் ஏலத்தின் போது சபைக்கு நன்கொடையாகக் கிடைத்த 04 நிலத்துண்டுகளின் பெறுமதி கணக்குகளில் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலங்களின் கொள்விலை கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | இக்குறைபாடுகளை 2020 இறுதி கணக்கின்போது நிவர்த்தி செய்வதாக அறியத்தருகிறேன். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்)<br>(i) விதி 60 | வியாபார வரி தொடர்பாக மெய்மையாய்வு செய்யும் உத்தியோகத்தரினால் வியாபார வரி தொடர்பான பட்டியலில் கிராம சேவகர் பிரிவு, ஆதன வரி இலக்கம் மற்றும் ஆண்டு பெறுமதி என்பன குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | குறித்த பட்டியலில் அடிப்படை தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். | கணக்காய்வினால் சுட்டிகாட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) விதி 218 | சபைக்குச் சொந்தமான சகல காணிகள் மற்றும் கட்டிடங்கள் மெய்மெய்யாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை | விதிகளின் அடிப்படையில் மெய்மையாய்வு செய்யப்பட்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 முதல் சபைக்குச் சொந்தமான சகல நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் மெயமையாய்வு சபை ஒன்றின் மூலம் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கிறேன். |
| (ஆ) தேசிய பெறுகை வழிகாட்டல் கோவை 2006 | | | |
| 6.2.2 உப பிரிவு | உள்நாட்டு போட்டி விலைமனு கோரலின் குறைந்த காலஎல்லை 21 தினங்களாக இருப்பினும் 2019 வருடத்தில் சொத்துக்களை குத்தகைக்கு வழங்குவதுடன் தொடர்பாக விலைமனுக்களை சமர்ப்பித்தற்காக 15 தினங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. . | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்படல் வேண்டும்.. | 2020 இல் விலைமனு கோருவதற்கான குறைந்தளவு காலஎல்லை 2019 செப்டம்பர் 1 ஆந் திகதியிலிருந்து 2019 ஒக்டோபர் 09 ஆந் திகதிவரை வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய அக் குறைவாடு தற்போது சரிசெய்யப்பட்டுள்ளதாக அறியத்தருகின்றேன். |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,894,646 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 29,137,196 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பலவருடங்களாக இருந்துவரும் ரூபா 53,717 பெறுமதியான மதிப்பிழந்த காசோலை தொடர்பாக நிதிப்பிரமாணம் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை | இக்காசோலைகள் தொடர்பாக தகவல்களைத் தேடிக் கொள்வதில் சிரமம் |

| | | | |
|---|---|---|---|
| | 189 மற்றும் 486 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எடுக்க வேண்டும். | காணப்படுகிறது. இது தொடர்பாக மேலும் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகின்றேம். |
| (ஆ) | 2019 வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்களுக்கிடையே இனங்காணப்படாத ரூபா 181,846 பெறுமதியான வேறுபாட்டினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை | இனம் காணப்படாத வேறுபாடுகளை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முன்னைய ஆண்டு தொடக்கம் இவ்வினங்காணப்படாத வேறுபாடுகள் இருந்துவருவதுடன், அதற்குரிய தகவல்களைக் கண்டறிவதில் சிரமம் காணப்படுகின்றது. இதன்காரணத்தினால் இந்த வேறுபாடுகளைத் தீர்த்து வைக்க முடியாதுள்ளது. |
| (இ) | கொடுப்பனவு காசேட்டினை பேணிவருதல், காசோலைகளை எழுதுதல் மற்றும் விநியோகித்தல் கொடுப்பனவு வவுசர்களைப் பேணிவருதல், செலவுத் தலைப்புகள் சமநிலைப்படுத்தல் போன்ற பிரதான 11 நிதிசார் செயற்பாடுகள் ஒரு உத்தியோகத்தருக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது, | ஒரு கொடுக்கல் வாங்கல் உத்தியோகத்தர் பலரால் பரீட்சிக்கும் விதத்தில் கடமைகளை பொறுப்புச்சாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போதுள்ள ஊழியர் எண்ணிக்கையின் அடிப்படையில் கடமைகளைப் பொறுப்புச்சாட்டும் போது இக்குறைபாடு நிகழ்ந்துள்ளது. தற்போது 01 முகாமைத்துவ உதவியாளருக்கான வெற்றிடமும் காணப்படுகிறது. எதிர்காலத்தில் கடமை பொறுப்புச்சாட்டல் தொடர்பாக திருத்தம் ஒன்றைச் செய்து காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத்தருகிறேன். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மையான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 2,,864,307 | 4,352,704 | 4,091,970 | 182,764 | 2,879,307 | 3,621,293 | 3,752,289 | 78,938 |
| ii. | வாடகை | 14,702,060 | 16,028,377 | 16,028,377 | 764,557 | 14,702,060 | 13,618,791 | 13,819,122 | 768,007 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 910,036 | 1,201,008 | 1,201,008 | - | 910,000 | 814,005 | 815,005 | - |
| iv. | ஏனைய வருமானம் | 99,398,660 | 83,302,085 | 83,302,085 | 67,369,368 | 70,616,700 | 89,695,292 | 76,819,273 | 44,712,708 |
| | மொத்தம் | 117,875,063 | 104,884,174 | 104,623,440 | 68,316,689 | 89,108,067 | 107,749,381 | 95,205,689 | 45,559,653 |

குறிப்பு

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானப் பெறுமதியில் கடந்த ஆண்டுகளுக்குரிய நிலுவை கிடைப்பனவுகளும் உள்ளடங்கியுள்ளது.

### 2.3.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் தெசெம்பர் 31 ஆந் திகதிக்கு 35 ஆதனங்களில் இருந்து ரூபா 81,376 ஆதனவரிப் பணம் அறவீடு செய்யப்பட வேண்டி காணப்பட்டது. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்போது ஏனைய நிலுவை மீதிகளை அறவீடு செய்வது இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக அறியத் தருகிறேன். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் 131 காணிச் உரிமையாளர் களிடமிருந்து ரூபா 36,587 பெறுமதியான அக்கரை வரி அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அக்கரை வரி பதிவேடு ஒழுங்கற்று பேணப்பட்டு வந்தமையால் பதிவேட்டினை சரிசெய்து 2020இல் இந்நிதி அறவீடு செய்யப்பட்டு வருகின்றது. |
| (இ) மீளாய்வாண்டின் இறுதியில் வியாபார வரியாக ரூபா 64,800 அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது | வியாபார வரியை குறித்த காலப் பகுதிக்குள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்நிலுவை மீதிகள் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டள்ளது. தற்போது 13 வழக்குகளுக்கு தீர்ப்பு கிடைத்துள்ளது. ஏனைய வழக்குகள் எதிர்வரும் தினங்களில் நடைபெறவுள்ளதாக அறியத்தருகின்றேன். |

**2.3.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | | |
|---|---|---|---|---|
| | | குறித்த வருடம் | நிலுவைத் தொகை ரூபா | அறவீடு செய்வதற்கு எடுத்த நடவடிக்கைகள் |
| | | ……… | ………… | ……………………. |
| வருடாந்த கேள்வி ஆதனங்கள் குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக மீளாய்வாண்டுக்கு முன்னரிருந்து இருந்துவரும் 05 சந்தப்பங்களுக்குரிய ரூபா 764,557 பெறுமதியான குத்தகை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2012 | 241,037.91 | வழக்குத் தீர்ப்பு கிடைத்துள்ளது. குத்தகைக்காரர் சிறையிலடைக்கப்பட்டுள்ளமையால் அறவீடு செய்வதற்கு முடியாது போயுள்ளது. |
| | | 2012 | 37,557.68 | நபர் மரணமடைந்துள்ளமையால் நிலுவைப் பணத்தை பதிவழித்து விடுவதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்ன் தற்போது அதுதொடர்பான விசாரணைக்ள நடைபெற்று வருகின்றன. |
| | | 2013 | 228,600.00 | வழக்கின் தீர்ப்பு கிடைத்துள்ளது. குத்தகைக்காரர் போதைப் பொருளுடன் தொடர்புபட்ட குற்றத்துக்கு சிறையிலடைக்கப்பட்டுள்ளமையால் அறவீடு செய்வதற்கு முடியாது போயுள்ளது. |

| | | |
|---|---|---|
| 2016 | 176,472.20 | வழக்கு தாக்கல செய்யப்பட்டுள்ளது. |
| 2016 | 80,889.20 | வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |

**2.3.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கிடைக்க வேண்டியிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 8,235,964 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 30,279,147 ஆகும். | நிலுவை தொகையை பெற்று செயற்திறனாகவும் வினைத்திறனாக வும் பயன்படுத்த வேண்டும். | இந்நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம் அறவீடு செய்யப்பட்டு வருகின்றன. |

**03. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 வது பிரிவின் கீழ் 29 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்தமையால் அந்த விடயங்கள் தொடர்பாக வடமேல் மாகாண சபை விதித்திருந்த உப விதிகளை சபை ஏற்றுக்கொண்டிருந்தது. | சபையின் தேவையைப் பொருத்து சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய உப விதிகளை விதித்துக்கொள்தற்கு நடவடிக்கை எடுப்பதுடன் விதிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(ஆ) எதிர்பார்த்த நலன்கள் பெறப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 இல் ரூபா 9,400,000 செலவுசெய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த 8 கடைகளைக் கொண்ட போவத்தை பேரூந்து தரிப்பு நிலையம் உரிய நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்படவில்லை. | பொது மக்களுக்கு அச்சொத்துக்களின் நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இவ்வாண்டில் தேவையான நிதிஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொண்டு அதனைப் பயன்படுத்தி பேரூந்து தரிப்பிடத்தை செயல்படும்நிலைக்கு கொண்டுவந்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியத்தருகிறேன். |
| (ii) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மாகாண குறித்த வீதிகள், போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் வியாபார வீடமைப்புத் தொகுதிகளை நிர்மாணிக்கும் வேலைகள் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் கஹவல வத்த குடிநீர் கருத்திட்டத்திற்காக ரூபா 7,189,225 தொகை செலவிடப்பட்டு மூன்று வருடங்கள் கடந்திருந்த போதிலும் மக்களுக்கு நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பொது மக்களுக்கு அச்சொத்துக்களின் நன்மைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2018 இறுதிவரை குறித்த கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு தடைகள் ஏற்பட்டதுடன் விசேடமாக (மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளல், நிர்மாணிக்கப்பட்டுள்ள கிணற்றுக்கு மறைப்பு ஒன்றை அமைத்தல்) 2020 இல் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அதனை செயற்படும் நிலைக்கு கொண்டுவர எதிர்ப்பார்க்கின்றேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்குகள் மற்றும் இலக்குகளையும் இனங்கண்டிருந்தது. நிலைபேறான அபிவிருத்தி நோக்குகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் சபையினால் 11 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்குகள் தொடர்பாக கவனம் செலுத்தி பாதீட்டை தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டுக்கான வியாபார உரிமைச்சீட்டுகளை விநியோகிப்பதற்கான விண்ணப்பப்படிவங்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரையைப் பெற்றுக்கொள்வதற்கு அனுப்பியிருந்தும் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை அனுமதியளித்து அனுப்பப்படாத 497 வியாபார அலகுகளிலிருந்து 2019 ஆண்டுக்கு அனுமதிப்பத்திர கட்டணங்கள் தொகையை அறவீடு செய்யமுடியாது இருந்தது.. | காணப்படும் சிக்கல் குறித்து உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து அதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது தொடர்பாக உள்ளூராட்சி திணைக்களத்திடம் தொடர்புகொள்ளப்பட்டுள்ளது. எதிர்கால செயற்பாடுகள் பற்றி இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை |
| (ஆ) | மீளாய்வாண்டின் 31 ஆந் திகதி செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் ஒரு வருடம் மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருக்கும் மொத்தத் தொகை ரூபா 17,096,279 ஆன மீதியைச் செலுத்தி விடுவிப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை மீதிகள் தொடர்பாக கண்டறிந்து அறவீடு செய்ய முடியுமான நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு செலுத்த வேண்டிய கணக்கு மீதியில் ஒரு வருடம் மற்றும் அதற்கு மேற்பட்டட காலத்தை விஞ்சியிருக்கும் ரூபா 3,314,087 கூட்டுத்தொகைன மீதியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளூராட்சிமன்ற ஓய்வூதிய சம்பள பங்களிப்புத் தொகையாக ரூபா 2,424,763 வருடக் கணக்காக செலுத்தப்படாமல் இருந்ததுடன் இம்மீதி தொடர்பாக மேலும் தேடிப்பார்த்து எதிர்காலத்தில் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 12,747,034 ஆன வைப்புக்களிலிருந்து திருப்பிச் | நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | ஆண்டின் இறுதியில் ரூபா 12,747,034 தொகையான வைப்புக்களிலிருந்து எதிர்காலத்தில் மீளச் செலுதத வேண்டியவ ப்புக்களை இனங்கண்டு கொடுப்பனவு செய்வதற்கு அல்லது வருமானத்திற்கு எடுபபதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் 34 பதவி வெற்றிடங்களும் 19 பதவி மிகையும் காணப்பட்டன. | தேவைப்பாடுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தேவையான பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதிலளிக்கப்பட வில்லை. |

**(ஆ) ஊழியர் பிணை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் 40 உத்தியோகத்தர்களிடமிருந்து பிணைத் தொகையாக ரூபா 106,575 அறவிடப்பட்டிருந்த போதும் 2011 தெசெம்பர் 15 ஆந் திகதிய வ/பி/செ/5/4/1/8 இலக்க பிரதான செயலாளரின் சுற்றறிக்கையின் 2.1அம் பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தர்களின் பெயரில் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு அப்பிணைத் தொகைகளை வைப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருட இறுதியில் கணக்கு மீதியிலிட்டு சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய உத்தியோகத்தர்களின் பெயரில் பிணைத் தொகை வைப்பீடு செய்வதற்கு விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்பட்டு வங்கியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான ஏனைய விடயங்கள் துரிதமாக செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக் கொள்கிறேன். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஆதனவரி நிலுவைத் தொகையில் 03 காலாண்டுகளுக்கு மேற்பட்ட 14 நிலுவை சொத்துக்களில் இருந்து ரூபா 64,058 அறவீடு செய்வதற்கு இருந்ததுடன் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை பணத்தை அீடு செய்து அதன் பிரகாரம் பதிவேடுகளை நாளதுவரைக்கப்படும் | இங்கு நிலுவைச் சொத்துககளாக அரச நிறுவனங்கள் இருப்பதுடன், குறித்த நிறுவனங்களுக்கு எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 இல் ரூபா 3,100,000 செலவில் கிறீன் எஸ்டேட் காணியில் நிர்மாணிக்கப்பட்ட சனசமூக நிலையம் மற்றும் மலசலகூடத் தொகுதி பயன்பாட்டிற்கு எடுக்கப்படவில்லை. | பொதுப் பணத்தை சிக்கனமாகவும் செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | சனநடமாட்டமற்ற பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டமையால் நீரை வழங்குவதற்கு பிரச்சினை ஏற்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இந்த இடத்தை விழா மண்டபமாக அபிவிருத்தி செய்து இந்த மலசலகூடத் தொகுதியை திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | உரிய வழிகாட்டலுக்கு அமைய பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்காக பெறுகைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 3.6.2 வழங்கல் மற்றும் சேவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான 03 நூல் நிலையங்கள் மற்றும் காரியாலய பணிகளுக்காக ரூபா 422,000 பெறுமதியான 05 மடிக்கணனிகள் கொள்வனவு செய்யும் போது விபரக்கூற்றுகளுக்கு பொருந்தாத கொள்வனவுகள் செய்யப் பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையும் கிடைத்திருக்கவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் விபரக்கூற்றுகளுக்கு இயைபானதா என்பது பரீட்சிக்கப்படல் வேண்டும். | இவ்பிரச்சினை தொடர்பாக குறித்த நிறுவனம் தெளிவு படுத்தப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக பதில் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. குறித்த கடிதத்தில் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக தொழில்நுட்ப ரீதியான நியாயப்படுத்தல் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. |